Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 362

வியாழக்கிழமை 23 நவம்பர் 2023

கார்த்திகை 07 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

**காஸாவில் போர் நிறுத்தம்**

விரிவு:- பக்.11



## ஜனவரி மாதத்திலிருந்து எங்கும் 'வற்'! எதற்கும் 'வற்'!!

கொழும்பு, நவ.23

இதுவரை பெறுமதி சேர் வரி (வற்வரி) விலக்களிக்கப்பட்ட பல பொருள்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 18 சதவீத வற் வரி அறவிடப்படவுள்ளது. பொருள்கள், சேவைகளுக்கான வற் வரியை அறிவிடும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படவுள்ளது. இந்த வரி விதிப்பால் பொருள்களின் விலைகள் எதிர்காலத்தில் உயரும் என்றும், அதனால் மக்கள் பொருளாதார அழுத்தங்களைச் சந்திக்க நேரிடும் »09

## தமிழர் நிலங்களில் வருமானம் ஈட்டும் படைக்கு ஏன் நிதி?

யாழ்ப்பாணம், நவ.23

தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்து இராணுவம் வருமானம் பெறுகின்றது. அவ்வாறிருக்க இராணுவத்துக்கு ஏன் அதிக நிதி? என்று நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன். துப்பாக்கிச் சத்தம் இல்லா விட்டாலும் தமிழ் மக்கள் போர்ச்சூழலிலேயே வாழ்கின்றனர். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டால் மட்டுமே இலங்கையின் பொருளாதாரம் மேம்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-எ-44)

# அடுத்த ஆண்டில் இரு தேர்தல்கள்!

## நாடாளுமன்றில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு
## உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு சஜித் சவால்

**கொழும்பு, நவம்பர் 23**

**அடுத்த ஆண்டு ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் என்பன நிச்சயமாக நடத்தப்படும். நாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை. தேர்தல்கள் எக்காரணத்துக்காகவும் பிற்போடப்படமாட்டாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.** »11

## மஹிந்த வழக்கை அவரே பார்ப்பார்!



கொழும்பு, நவ.23

ஆட்சியாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் தீர்ப்பைப் பெறலாம் என்ற நிலையே நானே உருவாக்கினேன். அதனால் எனக்கு எதிராகச் செயற்படவேண்டாம். நான் ஜனநாயகத்தைப் பலப்படுத்தியுள்ளேன். மஹிந்த ராஜபக்ச ஒரு சட்டத்தரணி, அவர் அவருக்கு எதிரான வழக்கை பார்த்துக்கொள்வார் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். (அ-எ-44)

## குளிக்கும் பெண்களை படம் பிடித்தவர் கைது

யாழ்ப்பாணம், நவ.23

குளியலறையில் நீராடிக்கொண்டிருக்கும் பெண்களை இரகசியமாகப் படம்பிடித்து, அதனை வைத்து மிரட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் நடந்துள்ளது. சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-எ-26-20)



வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் "கார்த்திகை வாசம்" மலர்க் கண்காட்சி நேற்று நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமானது. (எ-66)

## உயர்தரப் பரீட்சை ஜனவரியில் நடக்கும்!

கொழும்பு, நவ.23

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் 31ஆம்திகதிவரை நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ-எ-இ)

## கொக்குத்தொடுவாயில் நேற்று 5 மனித எலும்பு எச்சங்கள் மீட்பு

முல்லைத்தீவு, நவ.23

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்றும் ஐந்து மனித எலும்பு எச்சங்கள் மற்றும் துப்பாக்கிச் சன்னங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. கொக்குத்தொடுவாய் மனிதப் »11

## அலெக்ஸ் மரணம்; சுவிஸ் கரிசனை!

யாழ்ப்பாணம், நவ.23

பொலிஸ் தடுப்புக்காவலில் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று சந்தேகிக்கப்படும் அலெக்ஸ் என்ற இளைஞரின் மரணம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தவேண்டும் என்று இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்துத் தூதுவர் சிறிவால் தெரிவித்துள்ளார். (அ-எ-6)

## சிறைச்சாலையிலும் வாக்குமூலம் பதிவு!

யாழ்ப்பாணம், நவ.23

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் துன்புறுத்தலால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படும் நிலையில், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவானால் யாழ்.சிறைச்சாலையில் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. சிறைச்சாலை அத்தியட்சகர், உத்தியோகத்தர்களிடமே இந்த வாக்குமூலங்கள் பெறப்பட்டன. (அ-எ-20)

## சா/தரப் பரீட்சை இனி தரம் 10இல்!

கொழும்பு, நவ.23

எதிர்காலத்தில் தரம் 10 இல் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில் 17 வயதில் மாணவர் ஒருவர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் 4 வயதைப் பூர்த்தி செய்த சிறுவர்கள் கட்டாயம் முன்பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-இ)

### முல்லை. நீதிபதி விவகாரம்:
## அறிக்கை வந்தபின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை

கொழும்பு, நவ.23

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பான குற்றவியல் திணைக்கள விசாரணை அறிக்கை கிடைத்த பின்னரே அடுத்த கட்டம் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌஷல்ய நவரத்ன. (அ-எ-6)

## காணி மோசடியில் 2 பெண்கள் கைது!

யாழ்ப்பாணம், நவ. 23

வெளிப்படுத்தல் உறுதிமூலம் காணி மோசடி செய்த குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டனர். இந்த விடயத்தில் வேறு சிலரும் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்படுகின்றனர். நாவற்குழிப் பகுதியில் உள்ள »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐதரசன் குறைப்பு அரசிடம் திட்டம்

கொழும்பு, நவ. 23

இலங்கையில் ஐதரசனை குறைப்பதற்கான வழி வரைபடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கையளித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தற்போது 3 பாகையாக அதிகரித்துக் காணப்படும் வீதி வெப்பநிலையை 2030ஆம் ஆண்டில் 1.5 பாகையாகக் குறைக்கமுடியும் எனக் கூறப்படுகிறது. (ச-6)

# வடமாகாண வளர்ச்சிக்காக ஒத்துழைப்பு வழங்குவோம்!

## எரிக் சொல்ஹெய்ம் உறுதி



**யாழ்ப்பாணம், நவ. 23**

**வடமாகாணத்தின் துறைசார் வளர்ச்சிகளுக்குப் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு, பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாணத்தின் இடர் முகாமைத்துவம், மக்களின் அன்றாட வாழ்வியல் நிலை, காலநிலை, பொருளாதாரம், மாகாணத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆளுநரால் எடுத்துக் கூறப்பட்டது.

அதனைக் கேட்டறிந்த எரிக் சொல்ஹெய்ம், இலங்கையின் வளர்ச்சிக்கான பசுமைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சூரிய, காற்றாலை, நீர்மின் உற்பத்திக்கான வளங்களை இலங்கை கொண்டுள்ளமையால், பச்சை ஹைட்ரஜன் திட்டத்தை மேற்கொள்ளமுடியும். அதேவேளை வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு - வளர்ச்சிக்குத் தேவையான பூரண ஒத்துழைப்பை நல்குவோம் என்று ஆளுநரிடம் உறுதியளித்தார். (ச-27)

# நீதிமன்றம் மீதான தாக்குதல்; வழக்கிலிருந்து நீதிபதி விலகல்

யாழ்ப்பாணம், நவ. 23

2015ஆம் ஆண்டு புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பான வழக்கு விசாரணையின் போது அந்த ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு கல் வீசிய சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளில் இருந்து விலகிக் கொள்வதாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் சுமார் 300 இற்கும் மேற்பட்டவர்களைக் கைதுசெய்து, நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு கல் வீசியமை, சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமை, பொலிஸ் நிலையம் மீது கல்வீசியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடர்ந்து சந்தேகநபர்களை மன்றில் முற்படுத்தி, விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு கல்வீசிய வழக்கு விசாரணை சட்டமா அதிபர் திணைக்களத்தால் மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டதை அடுத்து, மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இந்நிலையில் வழக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாகத் தற்போது கடமையேற்றிருக்கும் நீதிபதி டீ.சூசைதாசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தனது தனிப்பட்ட காரணங்களால் இந்த வழக்கு விசாரணைகளில் இருந்து தான் விலகிக் கொள்வதாக தெரிவித்துள்ளார். (ஒ-20)

# ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டவரைவுக்கு அனுமதி

இலங்கையில் ஊடக ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளும் முகமாக அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டவரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

ஊடகங்களைப் பலப்படுத்துவதற்கும் உண்மையான தகவல்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்குமே ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டவரைவு கொண்டு வரப்படுகிறது. இந்தச் சட்டவரைவில் கருத்துச்சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனைவரினதும் கருத்துகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னரே சட்டமாக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-6)

# தாய்லாந்துடன் பண்டமாற்று

தாய்லாந்துடன் இலங்கை சுதந்திரவர்த்தக உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடவுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளது.

இதன் பிரகாரம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்குப் பதிலாக தாய்லாந்திலிருந்து இலத்திரனியல் உபகரணங்கள், இறப்பர், உணவுப்பொருள்கள், மருந்து வகைகள் என்பன இறக்குமதி செய்யப்படவுள்ளன. ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தம் டிசெம்பருடன் முடிவடையும் நிலையில் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது என்றும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-6)

# முதியவர் மீது வாள்வெட்டு

யாழ்., நவ. 23

வாள்வெட்டுக்கு இலக்கான முதியவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் புலோலி, முறாவில் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புலோலி வடக்கைச் சேர்ந்த கே.சண்முகராஜா (வயது-68) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

குறித்த நபர் ஆலயத்துக்குச் சென்ற போது இடைமறித்தவர்கள் வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தினர்.

இதில் தலை மற்றும் கைப் பகுதியில் படுகாயமடைந்த நிலையில் அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-100)

# எல்லைதாண்டி மீன்பிடி இலங்கை மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 23

ராமேஸ்வரம் - தனுஷ்கோடி அருகே எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் ஐவர் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் விசாரணைக்காக தமிழகக் கடலோரப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-27,100)

# யாழ். புறநகர்ப் பகுதியில் வீடொன்றின் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியில் வீடொன்றின் மீது, நேற்றுமுன்தினம் இரவு பெற்றோல் குண்டுவீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், உடைமைகளுக்கும் தீவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீட்டின் கதவு, வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் என்பவற்றின் மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்த பின்னர், வீட்டின் வளவுக்குள் பெற்றோல் குண்டையும் வீசியுள்ளனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்துபொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-20)

## பல்வேறு வசதிகளுடன்

# இலங்கையில் தடம்பதிக்கும் அமெ. எரிபொருள் நிறுவனம்

கொழும்பு, நவ. 23

அமெரிக்காவின் ஆர்.எம்.பாரக்ஸ் எரிபொருள் விற்பனை நிறுவனம், ஷெல் நிறுவனத்துடன் இணைந்து இலங்கையில் 110 மில்லியன் டொலரை முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

அதன்படி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 150 எரிபொருள் விற்பனை நிலையங்களினூடாக எரிபொருள் விற்பனையை இலங்கையில் ஆர்.எம். பாரக்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது. அத்துடன் இந்த நிறுவனம் புதிதாக 50 எரிபொருள் விற்பனை நிலையங்களையும் இலங்கையில் தொடங்கி பெற்றோலிய உற்பத்தி, எரிவாயு உள்ளிட்டவற்றையும் விநியோகிக்கவுள்ளது. (ச-6)

# கோடா, கசிப்பு மீட்பு: சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், நவ. 23

பிரான்பற்றில் 200 லீற்றர் கோடா மற்றும் 5 லீற்றர் கசிப்பு ஆகியவற்றுடன் 47 வயதுடைய சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாக காங்கேசன் துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் தடுப்பில் கொலை நீதியைப் பெற்றுத் தாருங்கள்

## சித்தார்த்தன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

**கொழும்பு, நவ. 23**

**யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்த இளைஞர் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் தலையிட்டு நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்.**

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான த.சித்தார்த்தன் வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் கடந்த காலங்களில் பொலிஸ் காவலில் வைக்கப்படும் சந்தேகநபர்கள் பலர் உயிரிழக்கும் சம்பவங்கள் பதிவாகின்றன. அண்மையில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர் ஒருவர் பொலிஸாரின் சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இது இயற்கை மரணம் அல்ல. பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகியே அவர் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவ அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயம். இந்த விடயத்தில் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். ஜனாதிபதி மற்றும் பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோர் தலையிட்டு உரிய விசாரணை நடத்தி நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் - என்றார். (ச-44-27-125)

# பொலிஸாரின் மிலேச்சத்தனம் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்

## பொலிஸ்மா அதிபருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 23

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் மிலேச்சத்தனமான தாக்குதல்களாலும், சித்திரவதைகளாலும் அப்பாவி இளைஞனின் உயிர் பறிபோயுள்ளது. இந்த இளைஞனின் சாவுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும் இனியொருபோதும் இத்தகைய அசம்பாவிதங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் துரித நடவடிக்கை அவசியம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இலங்கை பொலிஸ்மா அதிபருக்குக் கடிதமொன்றை அனுப்பி வலியுறுத்தியுள்ளார்.

அந்தக்கடிதத்தில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கடந்த 8ஆம் திகதி சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு, யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சித்தன்கேணியைச் சேர்ந்த இளைஞன் பொலிஸாரின் அராஜகமான தாக்குதலால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பப் பின்னணியைச் சேர்ந்த குறித்த அப்பாவி இளைஞன் பொலிஸாரின் மிலேச்சத்தனமான தாக்குதல்களாலும், சித்திரவதைகளாலும் உயிரிழந்துள்ளார். இதற்கு உயிரிழந்த இளைஞனின் வாக்குமூலக் காணொலி, சட்ட மருத்துவ நிபுணரின் உடற்கூற்றாய்வு அறிக்கை என்பவை சான்றாதாரங்களாகக் காணப்படுகின்றன. இதுதொடர்பிலான விசாரணைப் பொறிமுறைகள் எவையும் இதுவரை முறையாகக் கைக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை அநியாயமாகக் கொல்லப்பட்ட ஓர் அப்பாவி உயிரின் பெறுமதியை மலினப்படுத்துவதோடு, பொலிஸ் அதிகாரத்தனத்தின் வெளிப்பாட்டை கோரமானதாகப் பதிவுசெய்கிறது.

எனவே, இந்த விடயத்தில் உயரிய கரிசனைகொண்டு, பொலிஸார் மீதான குற்றங்களை மறைத்து விசாரணையை மடைமாற்றும் நீதிக்குப்புறம்பான செயற்பாடுகளைத் தவிர்த்து, இறந்துபோன இளைஞனின் உயிருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். இனியொருபோதும் இத்தகைய் அசம்பாவிதங்கள்- பொலிஸ் அராஜகங்கள் மீளநிகழாமையை உறுதி செய்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (ச-26,125)

# பொலிஸ் காவலில் கொலை; சுயாதீன விசாரணை தேவை

## அங்கஜன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 23

வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதையால் இளைஞன் உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு- செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பிலேயே கொடூரமாகத் தாக்கப்பட்டு இறந்துள்ளார். இது இயற்கை மரணம் அல்ல என்று உறுதியாகியுள்ளது. பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட சம்பந்தப்பட்ட பொலிஸார் இன்னமும் தண்டிக்கப்படவில்லை. இது போன்ற சம்பவங்கள் பல நடந்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும். சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் - என்றார். (ச-44)

**சீனாவிலிருந்து**

# இலங்கை வருகிறார் உயரமான புத்தர்!

கொழும்பு, நவ. 23

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான கலாசார நெருக்கத்தின் அடையாளமாக இலங்கையில் உயரமான புத்தர் சிலையை சீனா அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள சீன ஜனாதிபதியின் விசேட தூதுக் குழுவினர் கடந்த திங்கட்கிழமை, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அலரிமாளிகையில் சந்தித்தபோது இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர். (ஒ-6)

# புதினம் தெரியுமோ?

**மூக்கிருக்கிற மட்டும் தடிமனும் இருக்கிற மாதிரி, யாழ்ப்பாணக் கம்பஸ் இருக்கிற வரைக்கும் சர்ச்சைகளுக்கும் குறைவிருக்காது. எப்ப பார்த்தாலும் ஏதும் ஒரு பிரச்சினை அங்க வந்துகொண்டேதான் இருக்கும். அதிலையும் புதிசா ஆக்களை வேலைக்கு எடுக்கிறதில நெடுக ஏதோ ஒரு சிக்கல் வந்தேதீரும். இதுவும் அப்பிடிப்பட்ட ஒரு சிக்கல்தான்.**

**இராமநாதன் அக்கடமியும் கம்பஸின்ர ஒரு பீடம். அங்க இசைப்பிரிவில தற்காலிக விரிவுரையாளரா புதிசா ரண்டு பேரை எடுத்திருக்கு. போனமுறை 'பாஸ் அவுட்' பண்ணின மாணவர்களில நல்ல ரிசல்ட் எடுத்தவையைத்தான் இப்பிடி 'டெமோ' எண்டு சொல்லுற தற்காலிக விரிவுரையாளர் பதவிக்கு எடுக்கிறவை. பிள்ளையளின்ர திறமைக்கு ஒரு அங்கீகாரத்தைக் குடுக்கிறதோட, அவைக்கு ஒருவருசம் அனுபவமாயும் இருக்கட்டும் எண்டதுதான் இதின்ர் நோக்கம். இதுக்குப் பிறகு அவை அங்க நிரந்தரமா இருக்கவேணும் எண்டால், இன்னும் படிச்சு, தங்கட திறமையை வளர்த்து தங்கட தகுதியைக் கூட்டவேணும். அதுக்கு இந்த 'டெமோ' பதவி ஒரு தொடக்கமா இருக்கும். ஆனால் இந்தமுறை இசைப்பிரிவில குடுபட்ட 'டெமோ' பதவியில குளறுபடி நடந்திருக்கெண்டு பரவலாக் கதையடிபடுகுது. 'ஜீ.பி.ஏ' புள்ளி அடிப்படையில முன்னுக்கு உள்ள பிள்ளைக்கு 'டெமொ'குடுக்காமல், நாலாம் இடத்தில இருக்கிறவருக்கு குடுபட்டிருக்கு. இதுக்கு அந்த இசைப்பிரிவுக்குப் பொறுப்பா உள்ளவா தன்ர செல்வாக்கைப் பயன்படுத்தி, திறமையையும் ரிசல்ட்டையும் பாக்காமல் இப்பிடி மாத்திக் குடுத்திட்டா எண்டு பாதிக்கப்பட்ட தரப்புச் சொல்லுது. இப்ப இசைப்பிரிவுக்குப் பொறுப்பான லெக்சரை புதிசா எடுபட்ட அந்த 'டெமோ' தான் தன்ர பைக்கில ஏத்தி இறக்கிறார் எண்டும் சொல்லுகினம். ஆனால் "எங்களுக்கு பிரக்டிக்கல் செய்யக்கூடிய ஆக்கள் தான் தேவை. இப்ப டெமோவா எடுபட்டவருக்கு அந்தத் திறமை மற்றவையை விடக் கூட இருக்குது. அதைவிட தனிய புள்ளி அடிப்படையிலதான் 'டெமோவுக்கு' ஆக்களை எடுக்க வேணும் எண்டா, எதுக்கு இன்ரர்வியூ வைக்க வேணும்? பேசாமல் ரிசல்ட்டை வைச்சுக்கொண்டே தெரிவு செய்யலாமே? நாங்கள் எந்தவொரு பக்கச் சார்புமில்லாமல் நேர்மையாத்தான் இந்தத் தெரிவைச் செய்தனாங்கள்" எண்டு தங்கட பக்க நியாயத்தை அந்த இசைப்பிரிவுக்குப் பொறுப்பான லெக்சர் பட்சிக்குச் சொன்னா.**

**ஆனால் இஞ்சையும் ஒரு கேள்வி இடிக்குது. புள்ளி அடிப்படையில ரண்டாம் இடம் எடுத்த ஆளை விடவும் நாலாம் இடம் எடுத்த ஆள் கெட்டிக்காரர் எண்டால், அவர் ஏன் புள்ளியில குறைவா எடுத்தவர்? அப்பிடித் திறமையான ஆளுக்கு குறைவான புள்ளி வருகுதெண்டால் இவையின்ர புள்ளிபோடுற சிஸ்டத்தில ஏதோ பிழை இருக்கெண்டுதானே அர்த்தம்? அப்பிடியில்லாமல் தங்கட புள்ளியிடல் முறை சரியெண்டு சொல்லிச்சினம் எண்டால், ரண்டாமிடம் எடுத்த பிள்ளையைவிட நாலாம் இடம் எடுத்தவர் தான் திறமையான ஆள் எண்டுறதும் பிழைதானே. ஒண்டு புள்ளியிடலை மாத்தோணும், இல்லாட்டி சரியானபடி, நீதியான முறையில ஆக்களை பதவியளுக்கு எடுக்கோணும். இனியாவது கம்பஸ்காரர் இந்த விசயத்தைக் கவனத்தில எடுப்பினமோ?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பரவலாக தொழிற்பேட்டைகள்

## முதலீட்டுச்சபையின் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ. 23**

**காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய மூன்று பகுதிகளில் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்படுவதாக இலங்கை முதலீட்டுச்சபையின் வலய முகாமைத்துவ பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.கே.டி.லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் வடமாகாண ஆளுநர் செயலக ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்தி அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுற்றுலாத்துறை உள்ளிட்ட வருமானம் ஈட்டக்கூடிய துறைகளில் காணப்படக்கூடிய சிக்கல்களுக்கு அதிகாரிகளின் ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில் முதலீட்டு ஊக்குவிப்புகளை மேற்கொள்ளமுடியும் என வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன தெரிவித்த நிலையில், வடமாகாணத்தில் மூன்று தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்படுவதாக இலங்கை முதலீட்டுச் சபையின் வலய முகாமைத்துவ பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பகுதிகளில் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்காக அமைச்சரவைப் பத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் முதலீடுகளை ஊக்குவிக்கத்தயார் எனவும், இதற்கு ஆளுநரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் இலங்கை முதலீட்டுச்சபையின் வலய முகாமைத்துவ நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார் -என்றுள்ளது. (ஒ-26,100)

## ஆபத்தான மரங்கள்; ஏ-9 வீதியில் அகற்றல்

கிளிநொச்சி, நவ. 23

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ-9 வீதியிலுள்ள ஆபத்தான 46 மரங்களை அகற்றும் பணிகள் கிளிநொச்சி அரச மரக்கூட்டுத்தாபனத்தால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த வீதியில் ஆபத்தானதாக 57 மரங்கள் அடையாளம் காணப்பட்டன. அதில் 46 மரங்களை முழுமையாக அகற்றவும் 11 மரங்களில் ஆபத்தாகக் காணப்படும் கிளைகளை வெட்டி அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-113)



## முள்ளியவளையில் மாவீரர் கௌரவிப்பு

முல்லைத்தீவு, நவ. 23

மாவீரர் நாளை முன்னிட்டு முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதியில் மாவீரர்களின் பெற்றோர் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

தாயகம் மற்றும் புலம்பெயர்ந்தோர் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். மாவீரர்களின் பெற்றோருக்கு மாவீரர்கள் நினைவாக தென்னங்கன்றுகளும் கையளிக்கப்பட்டன. (ச-19)

## மனைப்பொருளியல் கற்கைக்கு தென்மராட்சியில் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ. 23

தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்தி அலகினர் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தவுள்ள மனைப்பொருளியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு பிரதேசத்தைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருடகாலத்தைக் கொண்டமைந்த இந்தப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலகில் பெற்று எதிர்வரும் டிசெம்பர் 12ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கலாம்.

பயிற்சியாளர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நேர்முகத் தேர்வு மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர். நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)



வடமராட்சி சுப்பர்மடம் கிராமத்திலுள்ள மாவீரர்களின் பெற்றோருக்கு கிராமமக்கள் அமைப்புகளின் ஏற்பாட்டில் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் மாவீரர்களுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ச-27)

## பட்ஜெட் அறிக்கை மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், நவ. 23

சாவகச்சேரி பிரதேசசபையின் 2024ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு- செலவுத் திட்டப் பட்டியல் மக்கள் கருத்தாய்வுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேசசபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் அவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதில் அடுத்த ஆண்டுக்கான மொத்த வருமானமாக 23 கோடியே 78 இலட்சத்து 47 ஆயிரத்து 958 ரூபாவும் மொத்தச் செலவினமாக 23 கோடியே 78 இலட்சத்து 44 ஆயிரத்து 958 ரூபாவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரம் ரூபா மிகையாகக் காணப்படுகிறது.

பாதீட்டில் பொதுமக்களால் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. இதுதொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் மக்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். அவசரப்பட்டு அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடவேண்டாம்.

**இடபம்:** தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத்திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்:** எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**துலாம்:** கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதிர்பாராத அலைச்சலும் மனக்குழப்பமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**கும்பம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. நெடு நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார்.

**மீனம்:** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மீளநிகழாமையை உறுதிசெய்வோம்

பொலிஸாரின் கட்டுக்காவலில் இருந்தபோது, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, சித்தன்கேணி இளைஞன் கொலையுண்டமை ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தினதும் மனச்சாட்சியையும் உலுக்கிவிட்டது. கூடவே பொலிஸார் மீதான நம்பிக்கையீனத்தையும் அதிகரிக்கச் செய்துவிட்டது. மக்களையும், சட்டத்தையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸார், அதற்குமாறாக சட்டத்துக்கு முரணாக ஒருவரைக் கைது செய்து மிகமோசமான சித்திரவதைகளைச் செய்து , அந்தப் பாதிப்பால் ஓர் உயிரே பறிபோகுமளவுக்கு நடந்துகொண்டமை மன்னிக்கமுடியாத குற்றம். எந்தவொரு நபரையும் பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையிலேயே கைது செய்கின்றனர். ஏனெனில் கைது செய்யப்பட்டுவிட்டால் மட்டும் அவர் குற்றவாளி என்று அர்த்தமல்ல. சிலவேளைகளில் அவர் நிரபராதியாகக் கூட இருக்கலாம். அதனால் அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பிடும்வரை சந்தேகநபராகவே நடத்தப்படவேண்டும். ஆனால் இங்கு அப்படியெதுவும் நடப்பதில்லை என்பதையே சித்தன்கேணி இளைஞனின் சாவு வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொலிஸாரின் சட்டத்தை மீறிய செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது ஒட்டுமொத்த இலங்கை முழுதுமே அவ்வப்போது பதிவாகவே செய்துள்ளன. சட்டவிரோதக் கைதுகள் முதல் 'தாக்கிவிட்டுத் தப்பியோடியதால் சுட்டோம்' என்ற சோடிப்புடனான சுட்டுக்கொலைகள் வரை இலங்கையில் பொலிஸாரின் அராஜகங்களுக்கு குறைவிருந்ததில்லை. ஆனாலும் இவை குறித்த வெளிப்படுத்தல்கள், கவனக்கோரல்கள், எதிர்ப்புகள் பெரியளவில் ஏற்படாததால் விசாரணைகள், அறிக்கைகள், கால இழுத்தடிப்புகள், கண்துடைப்புத் தண்டனைகள் என்று இந்தச் சட்டவிரோதக் காரியங்களில் ஈடுபட்ட பொலிஸார் தண்டனைகளில் இருந்து தப்பித்தே வந்தனர். யாழ்ப்பாணத்திலும் கூட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்சன் ஆகியோர் 2016ஆம் ஆண்டு ஒரு மழைக்கால இரவில் பொலிஸாரினால் எவ்வித முகாந்தரமுமின்றி வீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆனாலும் இன்னமும் அந்தச் சாவுகளுக்கான நீதி கிட்டவில்லை. இத்தகைய நிலையில் தான், சித்தன்கேணி இளைஞனின் சாவு பொலிஸாரின் கோரமான சித்திரவதைகளை பொது மக்களுக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

பொலிஸாரின் சித்திரவதையால் உயிரிழந்த அலெக்ஸ் என்ற இளைஞனின் சாவையும், கடந்த காலங்களைப் போல பத்தோடு பதினொன்றாகக் கடந்துவிடுவோமானால் பொலிஸாரின் இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் தொடரவே செய்யும். எனவே பொலிஸ் பூனைக்கு மணிகட்ட, இந்த இளைஞன் மரணத்தால் மக்கள் மத்தியில் உண்டாகியுள்ள எதிர்ப்பு மனோநிலையை உரிய தரப்புகள் சரிவரப் பயன்படுத்தவேண்டும். இந்த எதிர்ப்பு மனோநிலையின் ஒரு வடிவமாகவே 40க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் தன்னார்வமாக இந்த வழக்கில் முன்னிலையாகவுள்ளனர். நீதிக்காகக் குரல் கொடுக்க சட்டத்தரணிகள் எடுத்துள்ள இந்தத் திருப்புமுனையான முடிவு துணிச்சலானதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும். இதனையொரு ஆரம்பப்புள்ளியாகக் கொண்டு, அலெக்ஸின் மரணத்துக்கான நீதிப்பயணத்தில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் என்பனவும் இணைய வேண்டும். தொடர்ச்சியான எதிர்ப்பினையும், ஜனநாயக வழியில் சாத்தியமான போராட்டங்களையும் நிகழ்த்துவதன் வாயிலாக, குறைந்தபட்சம் அலெக்ஸ் என்ற இளைஞனின் சாவுக்கு காரணமானோருக்கு துரிதகதியில் தண்டனையைப் பெற்றுக்கொடுக்கமுடியும். அந்தத் தண்டனையும், அதன் மூலம் கிடைக்கும் படிப்பினையும் எதிர்காலத்தில் இதுபோன்ற சித்திரவதைக்கொலைகள் மீளநிகழாமையை உறுதிசெய்யக்கூடும்.


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

**"அறச்செயல்களின் மொத்தவடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரிவழங்குபவை மரங்கள்தான். தன்னை வெட்டுபவனுக்கும்கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"**

**-கௌதம புத்தர்**






நாடாளுமன்றில் அடாவடி:

# பெரமுன உறுப்பினருக்கு இருவாரங்களுக்குத்தடை

**கொழும்பு, நவ. 23**

**பொதுஜன பெரமுனக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த, இரு வாரங்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"சபையில் நேற்று (நேற்று முன்தினம்) நடைபெற்ற ஒழுக்கமற்ற நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றேன். நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்தவின், நாடாளுமன்ற சேவைக் காலத்தை இன்று (நேற்று) முதல் இரு வாரங்களுக்கு இடைநிறுத்துகின்றேன்" என்றார் சபாநாயகர்.

பொருளாதார நெருக்கடி விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கையில் அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மொட்டுக்கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் முன் வந்து அவர் வசம் இருந்த ஆவணங்களையும் பறித்து அடாவடி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறிப்பாக சனத் நிசாந்த, எதிர்க்கட்சித் தலைவரின் ஒலிவாங்கியை மடக்கி, அவர் வசம் இருந்த அறிக்கையைப் பறித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

# கிழக்கைக் கண்டுகொள்ளாத வரவு - செலவுத்திட்டம்

### சாணக்கியன் எம்.பி. கவலை

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் புறந்தள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றஞ்சுமத்தியுள்ளார். வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமது பிரதிநிதிகள் அரசாங்கத்தில் அங்கம் வகித்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று பகல் கனவு கண்டு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இரண்டு பிரதிநிதிகளை ஆளும் தரப்புக்குத் தெரிவு செய்தார்கள். ஆனால், கிழக்கு மக்களுக்கு பயனற்ற வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதிகளுக்கு மக்கள் எதிர்வரும் காலங்களில் தகுந்த பாடம் புகட்டுவார்கள் - என்றார். (ஒ- 213)

நாளை

24.11.2023

வெள்ளிக்கிழமை

கார்த்திகை 8

சுபநேரம் : 06.11 - 07.41

ராகுகாலம் : 10.41 - 12.11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையானது 2024ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்ட வழங்குபொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள். உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப் பட்ட சங்கங்கள். வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிட மிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் 29.12.2023ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலை
தொகுதி "C" - வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொ.இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A - 01 | அனைத்து காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A – 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் / இரும்பு / உருக்கு) |
| A – 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள். ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A – 04 | யன்னல் திரைச்சிலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A – 05 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A – 06 | கட்டிட இரும்புப்பொருட்கள், தீந்தைகள் வாணிஸ் மற்றும் இரும்பு பொருட்கள் |
| A – 07 | மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A – 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், திரவங்கள் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரீயூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப்பொருட்கள், தொழிலாளர்களுக்கான நீளச்சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருட்கள் |
| A - 15 | கற்கள், மண்வகைகள் |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | பாதணிகள், தோல்பொருட்கள் |
| A - 19 | அலங்காரப்பொருட்கள் |
| A - 20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |

| தொ.இல | சேவைகள் / வேலை |
|---|---|
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B – 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B – 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் ( மின் விசிறி, தொலைநகல், நிழற்பட பிரதி இயந்திரம், கணனி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B – 04 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீளமுறுக்குதலும் |
| B – 05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், அச்சிடுதல், பெயர்ப்பலகை, பனர்கள் ஞாபகார்த்த பலகை தயாரித்தல் ஏனையவை |
| B – 06 | கட்டிட அமைப்பும் திருத்தவேலைகளும், வீதி அமைத்தலும் புனரமைத்தலும் |
| B – 07 | உள்ளகத் தொலைபேசி வலையமைப்பு, இணைய வசதி வழங்கல் மற்றும் பராமரிப்பும் |
| B – 08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B - 09 | கோலவுடை தைத்தல் |
| B - 10 | இறப்பர் முத்திரை வகைகளைத் தயாரித்து வழங்கல் |
| B - 11 | சுத்திகரிப்புச் சேவையும் பாதுகாப்புச் சேவையும் |
| B - 12 | வளிச்சீராக்கி திருத்தம், சேவிஸ் செய்தல் |

| தொ.இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C - 01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம் சீற் என்பவற்றிற்கான குசன் வேலைகள் |
| C – 02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| C – 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

**நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு தொகுதிக்குமாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்களுக்காக மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 (காசாக) வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரியில் உள்ள எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் (மு.ப 9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை) பணத்தினை நேரடியாகச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி பற்றுச்சீட்டுடன் அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பங்களை அனுப்பும் போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2024** எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி, மானிப்பாய் என்ற முகவரிக்கு 31.12.2023ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. வழங்கல் / சேவைகள் 2024ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
4. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களில் திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை சபையின் செயலாளருக்கு உண்டு.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 225 6650 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.
23.11.2023

(CR 41088) A-1

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 25 கற்குளம் வீதி, ஆதன இல 32/4, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம். மொகமட் மொகதீன் என ஆதனப்பதி வேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை, 04.06.1920ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கே.எஸ். வீரவாகு முகதாவில் 11401ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதி மற்றும் 19.08.1920ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கே.எஸ். வீரவாகு முகதாவில் 12358ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதி ஆகியன தொலைந்தமையை சான்றுபடுத்திய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது.

குறித்து ஆதனத்திற்கு 17.09.1936ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆர்.சின்னத்துரை முகதாவில் 127 ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதி தொலைந்தமையை சான்றுபடுத்திய ஆவணம் இணைக்கப் பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை சாகுல்கமீட் மொகட் மொகிதீன், மொகமட் உம்மா கனிபா 19.08.1957ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வி.நவரத்தினம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5929ம் இலக்க நன்கொடை உறுதிமூலம் மொகமட் மொகிதீன் உமர் அப்துல் காதருக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை மொகமட் மொகிதீன் உமர் அப்துல் காதர் 25.09.2003ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.எம்.எம்.ரமீஸ் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 382ம் இலக்க நன்கொடை உறுதிமூலம் சலீமா உமர் அப்துல் காதருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை மொகமட் மொகிதீன் உமர் அப்துல் காதர் 28.10.2016ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜே. எஸ் ஏ மதுரநாயகம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2999ஆம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதிமூலம் அப்துல் கபூர் அலி அக்பரும் பெண் சாலிமாவும் வழங்கியுள்ளார்.

## ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "பள்ளுவிளித்தோட்டம் நிலப்பரப்பு 10 (பத்து இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி. நகுலேஸ் அவர்களால் 17.02.2006 ல் அளந்து வரையப்பட்ட 13629ம் இலக்க நில அளவைப்படத்தில் லொட் 04,05,06,07 எனக்குறிப்பிடப்பட்ட பகுதிகளாகிய நிலப்பரப்பு10 (பத்தும்) வீடும் கிணறும். செய்பயிர் வான்பயிர்களும்,

**இதற்கெல்லைகள்.-**

**கிழக்கு** :- தறுமு கனகலிங்கத்தின் ஆதனம்.
**வடக்கு** :- ஸ்ரார் சனசமூகநிலையத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.
**மேற்கு** :- லொட் 3, வைத்தியநாதன் சபாபதிக்கும் கனகாம்பிகைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
**தெற்கு** :- வெங்கடாலட்சுமி பெண் இராசுவின் ஆதனமும் றாஜன் மகாராணியின் ஆதனமும் சின்னர் லீலாவின் ஆதனமும்,


தற்போது அற்றோணித்தத்துவக்காரர் இளையதம்பி சற்குருநாதன் மூலம் அப்துல் கபூர் அலி அக்பரும் பெண் சாலிமா இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அப்துல் கபூர் அலி அக்பரும் பெண் சலிமா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்,

**ஆணையாளர்.**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
10
08
1961



மறைவு
22
11
2023

## திருமதி பங்கஜவல்லி குணநாதன் (குஞ்சு)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பங்கஜவல்லி குணநாதன் நேற்று (22.11.2023) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் ஓய்வுபெற்ற யா/அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபரும், தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய இராமநாதன் குணநாதன் அவர்களின் அன்புத்துணைவியாரும். அமரத்துவம் அடைந்த வியாகேசர்-இராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வியும், அமரத்துவம் அடைந்த இராமநாதன் சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், அமரத்துவம் அடைந்த நாகரத்தினத்தின் அன்புச் சகோதரியும், நிரோஜன் (பரிசாரகர், சித்தவைத்தியசாலை, கைதடி), நிஷாந்தி (மருந்தாளர், அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்), நிமலன் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புத்தாயாரும், சிந்துஜா, கபிலன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவுத் திணைக்களம், முல்லைத்தீவு) ஆகியோரின் மாமியாரும், தருநிஷா, பானுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2023) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பி.ப 1.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**[illegible]துறை வீதி,**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**0778969998**

(CR 27056) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 21.11.1949 மறைவு 20.11.2023

எமது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி ஆரதி சிவகிருஸ்ணன்** அவர்களின் அன்புத் தந்தை

**சோமசுந்தரம் சிதம்பரநாதன்**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்:

**யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

(cs.52933) (N.1)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் **திருமதி ஹயேந்தினி ஸ்ரீபன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் செல்லப்பா இராசரத்தினம்**

அவர்கள் 21.11.2023 அன்று இறைபதம் அடைந்தமையிட்டு பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 10.04.1954 மறைவு 21.11.2023

**ஆசிரியர் கழகம்**
**மானிப்பாய் இந்துக்கல்லூரி.**

# வீடு வாடகை / குத்தகை

யாழ், பூநாறி மரத்தடியில் KKS வீதியில் இருந்து 150m தூரத்தில் 6 அறைகளை கொண்ட நவீனவசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தனியார், அரச நிறுவனங்கள் விரும்பத்தக்கது. காரியாலயங்கள் நடத்தக்கூடிய இடம் அத்துடன் இதற்கு அருகாமையில் 2பரப்பு வெறுங்காணியும் குத்தகைக்கு/ வாடகைக்கு விடப்படும்.

**076 551 5717, 077 848 9079**

(CS 52930) (AK.1)

# 33ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கூட்டுறவாளர் அமரர்

**சண்முகம் ஞானப்பிரகாசம்**

அவர்கள்

(ஸ்தாபகர் முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாசம்)

தோற்றம் 06.10.1927 மறைவு 23.11.1990



சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் **அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள் மறைந்து இன்று 33 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச, கோப்பாய் பிராந்தியம்**

CR 41084

# 33ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கூட்டுறவாளர் அமரர்

**சண்முகம் ஞானப்பிரகாசம்**

அவர்கள்

(ஸ்தாபகர் முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாசம்)

தோற்றம் 06.10.1927 மறைவு 23.11.1990



சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் **அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள் மறைந்து இன்று 33 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

CR 41083

# காணி கட்டடம் விற்பனைக்கு

* பலாலி வீதி திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள 5 1/4 பரப்புக் காணியும் கட்டடமும் விற்பனைக்கு உள்ளது.
* A-9 வீதி திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் கட்டடமும் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:-**077 38 66 250**

(CR 41022)A-1

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 21 • 03 • 1932

இறப்பு 20 • 11 • 2023



எமது கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் நீண்ட கால ஆதரவாளரும் சாயி புகைப்பட நிறுவுனரும் ஆகிய **பீ.கருணாநிதி** (நாச்சிமார் கோவிலடி) அவர்களின் தந்தையார்

**கலாபூஷணம் இராசையா பீதாம்பரம் (பற்குணம்)**

(ஸ்தாபகர் - வண்ணை கலைவாணர் நாடக மன்றம)

அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது வளர்மதி முன்னேற்றக்கழகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்**
**சம்பியன் லேன், கொக்குவில்.**

CS 27054 (AK.1)

## மோ. சைக்கிள் தீயிட்டு எரிப்பு

கடமை நிமித்தம் மருதங்கேணி, நித்தியவெட்டைப் பகுதிக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் நேற்று தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளுக்குத் தீயிட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும், சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மருதங்கேணிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(எ-113)

# மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம் (V), 1985 இல் பிறந்த, கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட (Canadian Citizen) ரோகிணி நட்சத்திரம் உடைய விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

**075 538 9986**

(cs 52931) (N.1)

# Diesel Tank விற்பனைக்கு

14000L Pump உடன் Diesel Tank விற்பனைக்கு

**077 386 6250**

(CS52928) (AK-1)

# தவறவிடப்பட்டுள்ளது

**நிவாசன் கதிராசி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (525410269V) காரைநகர் இலங்கை வங்கிக்கும் ஆவந்தனை களபூமிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.** கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

**077 651 2684**

(CS52927) (AK-1)

# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BID

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) excluding VAT | Construction Period (No of Calendar Days) | Minimum Required CIDA Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE/ C1/2023/07 | Supply & Installation of Air Conditioning for the Auditorium & Board Room at Faculty of Management Studies & Commerce, University of Jaffna | 16.7 | 30 | C7/ C6/ C5 | Rs. 200,000.00 |
| 2 | YA/CWP/RE/ C1/2023/08 | Construction of Vehicle Park for the Faculty of Management Studies & Commerce, University of Jaffna | 6.1 | 60 | C8/ C7/ C6 | Rs. 70,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs. Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 23rd November 2023 until 13th December 2023** from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non-refundable fee of Rupees **Two Thousand five hundred (Rs. 2,500.00)** for each bids to be deposited to the People's Bank, University of Jaffna with the **Reference No "970000060000276"** should be filled in the **Account Number column** in the Deposit Slip
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch to reach on or before 10.00 hrs on 14th December 2023. Bids will be opened soon after closing, at 10.00 hrs on 14th December 2023 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 90 Days from the closing date of Bids submission or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of ***"Vice Chancellor, University of Jaffna."***
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Section 5
9. Pre Bid meeting will be held on 6th December, 2023 at 10.00 hrs at Capital Works & Planning Branch, University of Jaffna.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**22/11/2023**

(Cr.41040) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான அபிவிருத்தியின்றி சாபக்கேடாக இலங்கை நாடு!

## தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23

நீண்டகாலமாக எதிர்பார்த்த சமாதானம், நிலையான அபிவிருத்தி என்பவை ஏற்படாது தொடர்ந்தும் சாபக்கேடான நாடாக இலங்கை காணப்படுகிறது என்று அகில இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய ஏற்பாட்டாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்துள்ளார்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'சமூக ஒன்றிணைப்பை ஏற்படுத்துவதில் காணப்படும் தடைகளைக் களைதலும் ஒற்றுமைக்கான வழிகளை மேம்படுத்துதலும்' எனும் தலைப்பில் கருத்தாடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போருக்குப் பின்னர் இலங்கையானது பொருளாதார அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானம் ஆகிய மூன்றிலும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. 1990ஆம் ஆண்டு போர் காரணமாக தங்கள் சொந்தக் காணிகளை விட்டு பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அவர்களில் பலர் மீளவும் குடியமர்த்தப்படவில்லை. தற்போது இன்னும் ஏழு முகாம்கள் யாழ். மாவட்டத்தில் இருக்கின்றன.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாம், மல்லாகம் நீதிவான் முகாம் உள்ளிட்ட முகாம்களில் வாழும் மக்களுக்கு முறை யான மலசல வசதிகூட இல்லை. போதிய அடிப்படை வசதிகளில்லை. நீண்டகாலமாக எதிர்பார்த்த சமாதானம், நிலையான அபிவிருத்தி என்பவை தொடர்ந்தும் கானல்நீராகவே உள்ளன- என்றார். (ச-66)


## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் பரிசாரகராக கடமையாற்றும்
திரு.கு.நிரோஜன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி குணநாதன் பங்கஜவல்லி**

அவர்கள் நேற்று (22.11.2023) புதன்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிச் சங்கம்**
**சித்த போதனா வைத்தியசாலை, கைதடி.**

(CR 41089)A-1


## மின்சாரவேலியில் சிக்குண்ட கொம்பன் யானை உயிரிழப்பு



முல்லைத்தீவு, நவ. 23

ஒட்டுசுட்டான், பெரிய சாளம்பனில் வயலுக்கு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு மின்சார வேலியில் சிக்குண்டு கொம்பன் யானை நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளது.

இதேவேளை - சாளம்பன் கிராமத்தில் காட்டு யானையால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாகவும், கிராமத்துக்கான யானை வேலி இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர். (ஒ-19)


## நீங்கா நினைவுகளில் இருபத்தெட்டாம் ஆண்டுகள்





அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம் (சோமு)**
(ஸ்தாபகர், சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)
தோற்றம்:- 03.11.1941

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன் (டியூக்கோ)**
(மாணவன் - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)
தோற்றம்:- 18.08.1983

மறைவு
23.11.1995

| | | | |
|---|---|---|---|
| நகர்ந்தாலும் | ஆண்டுகள் | நாலேமு | இன்றுடன் |
| அகத்தில் | சோகம் | ஆறவில்லை | இன்றுவரை |
| புகழோடு | வாழ்ந்தீர் | பலரும் | போற்ற |
| உகத்தில் | மறவோம் | உங்களை | என்றும் |

துர்க்கா இல்லம்,
இல.29, ஓட்டுமடம் வீதி,
ஓட்டுமடம், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



## பெயர்மாற்றம்

மீசாலை தெற்கு, மீசாலையை வதிவிடமாகக் கொண்ட **செல்வராசா கீதன்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **செல்வராசா தீதன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **செல்வராசா தீதன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயகக குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cs.52933) (N.1) **செல்வராசா தீதன்**



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 17 . 04 . 1939



இறப்பு 04 . 12 . 2022

அமரர்
**திருமதி பத்மாவதி சேதுகாவலர்**

திதி - கார்த்திகை மாத பூர்வபக்க ஏகாதசி

ஓராண்டு கடந்தாலும்
உம் நினைவுகள் கலையவில்லை
எம்மோடு நீங்கள் வாழ்ந்த கணங்கள்
ரணங்களாய் பிளிகிறது
உங்கள் பிரிவு எங்கள் வாழ்வின் சரிவு
உங்கள் மீளாத்துயில் என்றென்றும் இறைபதத்தில்
ஆத்ம திருப்தியோடு அமைய
இறைவனை வேண்டுகின்றோம் அம்மா

*என்றும் உங்கள் நினைவுடன்...*

174/11A, கோவில் வீதி,
நல்லூர்-யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 27057) A-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முறிகண்டியில் யானை சாவு!



முல்லைத்தீவு, நவ. 23 முறிகண்டி ரயில் நிலையத்தி லிருந்து கிளிநொச்சி நோக்கி சுமார் 500 மீற்றர் தொலைவில் உத்தரதேவி ரயிலுடன் நேற்று மாலை மோதுண்டு யானையொன்று உயிரிழந்துள்ளது. (ஒ-214)

எங்கும்...

என்றும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்த சுகாதார சேவைகள், மருத்துவ உபகரணங்கள், விவசாய உபகரணங்கள், தோல் உற்பத்திகள், கைபேசிகள், மின்சார உபகரணங்கள், மின்குமிழ்கள், பால் பதனிடும் இயந்திரங்கள், பண்ணை உற்பத்திக்குரிய உபகரணங்கள் போன்ற பொருள்களும் தற்போது வற்வரி பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சில மருந்துகள் மற்றும் உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துக்கும் வற்வரி அறிவிடப்படவுள்ளது.

நூல்கள், சஞ்சிகைகள், நூலக சேவைகள், தானியங்கள், வைரங்கள், முத்துக்கள் என்பவற்றுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வற்வரி அறவிடப்படவுள்ளது. இவற்றில் சிலவற்றின் வரிகளை அறவிடுவதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவைதவிர உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் புதுப்பிக்கத்தக்க மின்சாரம், மருத்துவத் தளபாடங்கள், பால் உற்பத்திகள், விடுதிகள், சீனி, ஆபரணங்கள், வெளிநாட்டில் உள்ளவர்களுடன் இலங்கை நாணயத்தில் மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகள், காப்புறுதி நிறுவனங்களின் ஆய்வு, அபிவிருத்தி நடவடிக்கைகள் என அனைத்துக்கும் இனிமேல் வற்வரி அறிவிடப்படவுள்ளது. விளையாட்டு அமைச்சால் மேற்கொள்ளப்படும் விளையாட்டுக்கள் சார்ந்த நிகழ்வுகளுக்கும் ஏற்பாட்டாளர்கள் இனிமேல் வற்வரி செலுத்தவேண்டும்.

அதேவேளை, வரலாற்றில் இல்லாத அளவு இந்த ஆண்டு வரி வருமானம் கிடைக்கும் என்று ஜனாதிபதி செயலக பொருளாதார அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் ஜி.குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு 3 ட்ரில்லியன் ரூபா வரி வருமானத்தை எதிர்பார்த்துள்ளோம். நவம்பர் 17ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 318 பில்லியன் ரூபா வரிவருமானமாகப் பெறப்பட்டுள்ளது. இறைவரித் திணைக்களம், சுங்கம், மதுவரித் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக இந்த வருமானம் பெறப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 . 03 . 1943



உதிர்வு 24 . 10 . 2023

### திருமதி கைலேஸ்வரி பாலசிங்கம்

அன்பால் அரவணைத்து அறிவுரைகள் சொல்லி
– எங்களை
அவனியிலே வாழ்வாங்கு வாழவைத்த தாயே!
இவ்வுலகை விட்டு அவ்வுலகு சென்று
இறைவனின் பாதங்களை சரணடைந்த – உங்களை
இந்நாளில் நினைந்து வணங்குகின்றோம் – அம்மா

572/8, "கைலை வாசா",
கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி
மற்றும் சகோதரங்கள்

CS 27003 (AK.1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 06.01.1983

### ஆறுமுகம் செல்வகுமார்

இறப்பு 22.11.2023



கோண்டாவில் மேற்கினைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு பரமானந்தவல்லியினை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்வகுமார் அவர்கள் நேற்று (22.11.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் ஆறுமுகம் சற்குணதேவி தம்பதியரின் செல்வப் புதல்வனும், வேலாயுதபிள்ளை இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சிவாஜியின் அன்புக் கணவரும், ஹரிணி, ஹரணிகரன், அருண்றாஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூரியகுமார், சுதர்சினி, யோகேஸ்வரன், லோகிதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவமயூரி, ஆர்த்திகா ஆகியோரின் அத்தானும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27061)A-1

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் ஜெகதீஸ்வரன் (வெள்ளைத் தம்பி)



தோற்றம் 04.02.1945

மறைவு 22.11.2023

யாழ், கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஜெகதீஸ்வரன் அவர்கள் நேற்று (22.11.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான, நாகலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா மனோன்மணி தம்பதிகளின் அருமை மருமகனும், வனசாவின் அன்புக்கணவரும், சுபாசினி, சசிக்குமார், சபேஸ்குமார், ரேவதி ஆகியோரின் அன்புத்தந்தையும், வசிகரன், சிவராணி, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வைசு, அக்சயன், அஸ்வந், அதித்தி, மகிஷா, பரணிஷ் ஆகியோரின் அன்புப்பேரனும், ரட்ணராஜா, காலஞ்சென்றவர்களான விக்னராஜா, விமல்ராஜா மற்றும் சியாமினி, சாந்தினி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2023) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 023 9222

(CS 27058) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 09 . 1945



மறைவு 22 . 11 . 2023

### நன்னியன் நடேசு

(காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்)

உரும்பிராய் விளாத்தியடியை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை மாம்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியன் நடேசு நேற்று (22.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னியன் லட்சுமியின் அன்பு மகனும், கனகு கதிராசி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமகளின் பாசமிகு கணவரும், மார்க்கண்டு, காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சின்னமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மணியம், காந்தி, செல்வம் மற்றும் அன்னேஸ்வரி, கந்தசாமி (சின்னன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கருணா, வனிதா, புவனா, தனகீர்த்தன் (கீர்த்தன்-ஜேர்மனி), சுகீர்த்தன், பானுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரன், தாட்சாயினி (ஜேர்மனி), சசி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வரகஜன், சோபிகன், பானுயன், சோபியா, நிசான், புவிஸ்கரன், கனிஸ்கன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆவளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாம்பிராய் வீதி,
காங்கேசன்துறை,
தொடர்பு:-077 922 2839

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27060) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தென்மராட்சி மாணவர் ஒன்றியம், ஸ்ரீலங்கன் யுனைட்ஸ் இணைந்து, தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் வாசிப்புத் திறனையும், கற்றல் திறனையும் மேம்படுத்தும் வகையில் பெறுமதியான புத்தகங்களை பாடசாலைகளுக்கும், நூலகங்களுக்கும் அண்மையில் அன்பளிப்பாக வழங்கின. (ம-ரி-125)



# மரக்கன்றுகள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

மாதகல் கிராமத்தில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இலங்கை மாதகல் நலன்புரிச்சங்க அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.


மாதகல் நலன்புரிச் சங்க பிரான்ஸ் கிளையும், மாதகல் நலன்புரிச் சங்கமும் இணைந்து 'பசுமையில் மாதகல்' எனும் தொனிப்பொருளில் இந்தச் செயற்றிட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன. (ம-ரி-66)



ஜே/154 மாரீசன்கூடல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கடற்கரை வீதிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. இந்த நிகழ்வில் கிராமமட்ட உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-66)



விவசாய அமைச்சின் நிதியுதவியுடன் 50 வீத மானிய அடிப்படையில் விவசாயக் கிணறுகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் புனரமைக்கப்பட்ட ஐந்து கிணறுகளுக்கான காசோலைகள் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமாரால் அண்மையில் பயனாளிகளிடம் வழங்கி வைக்கப்பட்டன. (ரி-66)



வரலாற்றுச் சிறப்புமிக்க வல்வெட்டித்துறை வல்வை சிவன் கோயிலில், சக்கரவாக பட்சியில் சூரபத்மன் வதைபடலம் கடந்த சனிக்கிழமை பல பாகங்களில் இருந்து வந்த பக்தர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-27)



பளை பிரதேச பாடசாலைகளில் கல்விகற்கும் தெரிவு செய்யப்பட்ட 250 மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கிரிசலிஸ் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் இவை கையளிக்கப்பட்டன. (ச-9)



ஓய்வுநிலை அதிபர் கு.குகானந்தனுக்கு வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கலாசாரப் பெருவிழாவில் 'செம்புலக்குரிசில்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ம-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அடுத்த...

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திட்டன் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது உரையில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

"ஆதரவாக வாக்களித்த 122 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எதிராக வாக்களித்த 77 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றிகள். ஏனெனில் அவர்கள் தங்களுக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்" என்று ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

"நாம் தேர்தலுக்கு அஞ்சவில்லை. ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் அடுத்த வருடம் நடத்தப்படும். ஒன்றைக்கூடப் பிற்போடமாட்டோம். அதற்கு அடுத்த ஆண்டு மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை நடத்தலாம். அதில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முடிந்தால் முதலில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சவால் விடுத்திருந்தார். (அ-எ-44)

### கொக்குத்...

புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டு நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

அகழ்வு நடவடிக்கைகள் முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க.வாசுதேவா, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் இரு மனித உடல்களின் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில், நேற்று ஐந்து மனித உடல்களின் எலும்பு எச்சங்களும், துப்பாக்கிச் சன்னங்களும் மீட்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் முதற்கட்ட அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிவரை நடைபெற்றன.

அப்போது 17 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டன. துப்பாக்கிச் சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்திய இலக்கத் தகடு, உடைகள் போன்ற சான்றுப்பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன. (அ-எ-இ)

### காணி...

காணியொன்றே இவ்வாறு மோசடியாக வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றப்பட்டு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வசித்த காணியின் உரிமையாளர் தனது காணிக்குச் சென்று பார்த்தபோது அந்தக் காணி இவ்வாறு மோசடியாக அபகரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது. அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப்பிரிவினரிடம் முறையிட்டார். யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப்பிரிவின் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, காணி மோசடி தொடர்பில் இரண்டு பெண்களை சந்தேகநபர்களாகக் கைது செய்தனர். இன்னும் சிலர் தேடப்பட்டு வருகின்றனர்.

பொதுமக்கள் காணிகளைக் கொள்வனவு செய்யும்போது மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும். ஒரே பெயருடனான அடையாளப்படுத்தலில் இருக்கும் தாய் உறுதிகளைக் கொண்ட காணிகள் இவ்வாறு மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே காணிக் கொள்வனவின்போது ஒன்றுக்குப் பத்துத் தடவை இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதுடன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் காணிப்பிரிவில் தோம்பு உள்ளிட்ட ஆவணங்களை நேரில் சென்று உரிய நடைமுறைகளைப் பின்பற்றி பெற்றுச் சரிபார்ப்பதன் மூலம் இந்த மோசடிகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (அ-ம-26)

# காஸாவில் போர் நிறுத்தம்

கொழும்பு, நவ.23

காஸாவில் உள்ளூர் நேரப்படி இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணி முதல் தாங்கள் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கவுள்ளோம் என்று சிரேஷ்ட ஹமாஸ் அதிகாரி முசா அபௌ மர்சூக் அறிவித்துள்ளார் என ஜெருசலேம் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

போர்நிறுத்தத்தின் முதல் நடவடிக்கையாக இஸ்ரேலின் தென்பகுதியில் ஹமாஸ் பிடித்து வைத்துள்ள 239 பணயக் கைதிகளில் 80 பேர் விடுதலை செய்யப்படவுள்ளனர். இதில் முதல் கட்டமாக 50 பேர் விடுவிக்கப்படவுள்ளனர். ஏனைய கைதிகள் கட்டம் கட்டமாக போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் ஐந்து தினங்களில் விடுவிக்கப்படவுள்ளனர்.

ஹமாஸால் விடுதலை செய்யப்படவுள்ள கைதிகளை வரவேற்பதற்கு இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவில் கதிரைகள் போடப்பட்டுள்ளன. ஹமாஸ் தடுத்து வைத்திருக்கும் கைதிகளின் ஒளிப்படங்கள் அடங்கிய பதாகையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை - கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவதற்கு பணயக் கைதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது. தாங்கள் அனைவரும் ஒரேயடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். பணயக்கைதிகள் அனைவரும் இஸ்ரேலியர்கள் அல்லது இஸ்ரேலிய இரட்டைப் பிரஜாவுரிமை வைத்திருப்பவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-6)

# தலைவர் பிரபாகரனைக்கூட மறந்துவிடக்கூடிய அவலநிலை!

## மனம் வெதும்புகிறார் சி.வீ.கே.



யாழ்ப்பாணம், நவ.23

இன்னும் பத்து ஆண்டுகளில் பிரபாகரன் யார்? என்று கேட்கக்கூடிய நிலை ஏற்படும். எங்கள் மக்களிடம் இவ்வாறான மறந்து போகின்ற பண்பு காணப்படுகின்றது என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்திய "கார்த்திகை வாசம்" மலர்க் கண்காட்சி நேற்றுப் புதன்கிழமை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமானது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கார்த்திகை வாசம் 1954 ஆம் ஆண்டில் உருவானது. அந்த வாசம் படிப்படியாக வளர்ச்சியுற்று தற்போது தாயக மண்ணின் பல பகுதிகளிலும் வீசிக் கொண்டிருப்பதுடன் மாத்திரமல்லாமல் பல்கிப் பெருகிப் பல நாடுகளிலும் தற்போது கார்த்திகை வாசம் வீசிக் கொண்டிருக்கிறது.

பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே மழை பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே என்று பாடிக் கார்த்திகையைப் பெருமைப்படுத்தியவர் புதுவை இரத்தினதுரை. இந்தக் கார்த்திகை வாசம் இன்றும் வீசும், இனியும் வீசும்.

பல சந்தர்ப்பங்களில் வடக்கு மாகாணசபை தொடர்பான விமர்சனங்களைப் பார்த்திருக்கின்றேன், கேட்டிருக்கின்றேன். வடக்கு மாகாண சபை ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வதில் நியாயமுமிருக்கிறது, அநியாயமுமிருக்கிறது. வடக்கு மாகாணசபை ஆரம்பித்த சில விடயங்களில் வடமாகாண மரநடுகை மாதம் மிக முக்கியமானது. அந்தப் பிரேரணையை ஐங்கரநேசன் முன்மொழிந்து, வழிமொழிந்து ஏற்றுக் கொண்ட பின்னர் அவைத் தலைவர் என்ற வகையில் அதை நடைமுறைப்படுத்துங்கள் என்று நான் கூறியிருந்தேன்.

தற்போது வடக்கு மாகாணசபை ஒரு திணைக்களமாகச் செயற்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை அதிகாரிகள் நிறைவேற்றும் வகையில் தற்போதும் அவைத் தலைவர் என்ற முறையில் கடிதம் மூலமாகத் தெரிவியுங்கள் என்று ஐங்கரநேசன் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கமைய எங்கள் தீர்மானத்தை நினைவூட்டி வடக்கு மாகாண ஆளுநருக்கும், பிரதம செயலாளருக்கும் கடிதம் அனுப்பியிருந்தேன். இதற்கமைய சில செயற்பாடுகளை அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள்.

தற்போது எல்லோரும் தமிழ்த்தேசியம் பேசுகிறார்கள். ஆனால், பல இடங்களில் அது வார்த்தையிலும், உச்சரிப்பிலும் மாத்திரம்தான் இருந்து வருகிறது. ஆனால் தமிழ்த்தேசியம் என்பது உணர்வுபூர்வமானது, உளப்பூர்வமானது, அர்ப்பணிப்பு மிக்கது.

தற்காலத்தில் புது ஆய்வாளர்கள், அறிவாளிகள், ஆலோசனை சொல்பவர்கள் என்று பலர் வரலாறு தெரியாமல் எம் மத்தியிலிருக்கிறார்கள். பல விடயங்கள் இந்த மண்ணில் நிகழ்ந்தபோது வாழ்ந்தவர்கள் இருக்கிறபோதே வரலாற்றைத் திரிபுபடுத்திப் பேசுகின்ற துரதிர்ஷ்டம் தொடர்ந்து வருகிறது - என்றார். (எ-66)

# கௌரவிப்பு

சாவகச்சேரி, நவ.23

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று பாடவிதானங்களில் பங்குபற்றித் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கங்களையும், பணப்பரிசில்களையும்பெற்றுக் கொண்ட மாணவ சாதனையாளர்கள் கௌரவிப்பும், தமிழ்த் தின விழாவும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இனறு வியாழக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி கலாசக்தி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள தமிழ் மொழிக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் வடிவேலையா வசந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (எ-131)

# மாணவர் படையணிக்கு நேர்முகம்

யாழ்ப்பாணம், நவ.23

தேசிய மாணவர் படையணியின் வடக்கு மாகாண மாணவர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். அதற்கான நேர்முகத் தேர்வு தேசிய மாணவர் படையணியின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் கேணல் திசாநாயக்க தலைமையில், யாழ். மத்திய கல்லூரியில் நடந்துள்ளது. மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படும் காலத்தில் வேண்டுமென்றே இந்த நேர்முகத்தேர்வை மாணவர் படையணிக்கு நடத்தியுள்ளனர் என்று பலரும் குற்றம் சாட்டியுள்ளனர். (அ-எ-125)

# இந்தியாவின் தோல்வி இருவர் உயிர்மாய்ப்பு!

கொழும்பு, நவ. 23

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தோல்வியடைந்ததையடுத்து அதனைத் தாங்கமுடியாது மனமுடைந்து இரண்டு இந்திய ரசிகர்கள் தமது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளனர்.

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்தராகுல் (வயது-23) மற்றும் ஒடிசாவின் ஜெய்ப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த தேவரஞ்சன்தாஸ் ஆகிய இளைஞர்களே உயிர்மாய்த்துக் கொண்டுள்ளனர். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் உரிமையைத் தந்த எமக்கே சேறு பூசப்படுகிறது

## மஹிந்த ஆதங்கம்

கொழும்பு, நவ. 23
மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தி நாட்டுக்காகக் கடமையை நிறைவேற்றியுள்ள எமக்கு எதிராக குற்றச்சாட்டு கள் முன்வைக்கப்படுகின்றன. அனைத்து குற்றச்சாட்டுகளையும் முழுமையாக நிராகரிக்கின்றோம் .
- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இன்று வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளது. மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதை நாம் விரும்பவில்லை. நாட்டை மீட்டெடுக்கும் வேலைத்திட்டம் ஜனாதிபதியிடம் உள்ளது. அரச ஊழியர்களுக்குக் கொடுப்பனவு அதிகரிப்பு, அஸ்வெசும கொடுப்பனவு மும்மடங்காக அதிகரிப்பு உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.
பொருளாதாரம் தொடர்பில் எமக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்தியவர்கள் நாங்கள். ஆனால் எங்களின் குடியுரிமையைப் பறிப்பது பற்றிக் கதைக்கின்றார்கள். திட்டமிட்ட அடிப்படையில் சேறுபூசுகின்றனர். சேறுபூசுபவர்கள் தங்களின் கரங்களிலும் சேறு படிந்துள்ளமையை அறிந்துகொள்ளவேண்டும் - என்றார். (ச-44)

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்
DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17075)

ROLLER GATE
யாழ். பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றிற்கு இரண்டு ROLLER GATE (2) மற்றும் ஒரு விக்கட் GATE பொருத்துவதற்கு அனுபவம் உள்ள TECHNITION தேவை. GATE இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பொருத்தி தரக்கூடியவர் தேவை.
0777 111 999

JOB VACANCY (MALE)
Production Food Quality Controller required for our food processing plant located in Kaithady. Must have at least two years of good experience
Eligible candidates can contact the below mentioned phone number CS 52920 (AK 1)
074 123 5110

அலுவலக உதவியாளர் தேவை
சண்டிலிப்பாயில் இயங்கிவரும் முன்னணி கல்வி நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளராக முழுநேரம்/பகுதிநேரம் கடமையாற்ற பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
முழு விபரங்களை உள்ளடக்கிய சுயவிபரக்கோவையை 28.11.2023 இற்கு முன்னர் manipayeducation@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
077 855 5295
077 340 0950

சுருட்டு சுற்றும் உரிமம் [LICENCE] தேவை
சுருட்டு சுற்றும் உரிமம் (LICENCE) தேவை. புதுப்பிக்கப்படாத/ காலாவதியான/ நடைமுறையில் உள்ள LICENCE கொள்வனவு செய்யப்படும். பல வருடங்கள் பழமையானது என்றாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.
0777 111 999

# அகிலத்தில் தடம்பதித்தார் 71 வயது ஈழ மூதாட்டி



முல்லைத்தீவு, நவ. 23
பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 'நஷனல் மாஸ்டர்ஸ் அன்ட் சீனியர்ஸ் அத்லெட்ரிக்ஸ்' போட்டியில் இலங்கையிலிருந்து பங்கேற்ற 71 வயது மூதாட்டி இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் ஆகியவற்றைத் தனதாக்கியுள்ளார்.
முல்லைத்தீவு, முள்ளியவளையைச் சேர்ந்த 72 வயதுடைய திருமதி அகிலத்திருநாயகி என்பவரே இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார். இவர் 1,500 மீற்றர் ஓட்டம் மற்றும் 5000 மீற்றர் விரைவு நடைப் போட்டியில் தங்கப் பதக்கங்களையும் , 800 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கத்தையும் 5000 மீற்றர் ஓட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்று ஈழமண்ணுக்கு பெருமைசேர்த்துள்ளார்.
இவரை இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் தனது ருவிற்றர் பக்கத்தில் பாராட்டியுள்ளார். (ச-75)

31ஆம் நாள் நினைவஞ்சலி
கடந்த 24.10.2023 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்



அமரர் இராசையா வேல்முருகன் (மாத்தையா)
அவர்களின் ஆத்ம சாந்திப் பிராத்தனையும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வும் இன்று (23.11.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற இருப்பதனால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
யாழ்ப்பாணம்
077 900 6792
தோற்றம் 27.08.1952
மறைவு 24.10.2023

# இணுவிலில் இன்று கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 23
தேசிய மட்ட ரீதியிலான தனிநடனப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவியையும், மற்றும்தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இணுவில் இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் வே. உதயமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-66)



அஞ்சல் சேவையில் 26 வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் ஆறுமுகம் தேவராசா என்ற அலுவலரைக் கௌரவிக்கும் நிகழ்வு, கிளிநொச்சி, தருமபுரம் உப அஞ்சல் அலுவலகத்தில் உப அஞ்சல் அதிபர் பொன்.கமலின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ம-75)

30ஆம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம் 26 • 09 • 1929
மறைவு 27 • 11 • 1993



திதி : பூர்வபக்க ஏகாதசி
சின்னத்தம்பி சந்திரசேகரம்
[ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர் R.M.C (R.D.A)]
கார்த்திகைமாதம் கார் இருள் நாளில்
கவர்ந்தான் காலன் கண்ணெதிரே
கடந்தன ஆண்டுகள் முப்பதுவே
கலங்கரை விளக்காய் காத்திருந்தீரே
கலங்கிட எமைப்பிரிந்து சென்றுவிட்டீரே
காத்தருளவேண்டுகின்றோம் கணபதியேதுணை
ஓம் சாந்தி!
"இன்பகம்"
இணுவில் மேற்கு, இணுவில்
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org